செ.வெ. எண்: 304 நாள்: 25.05.2011

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு.டி.கே.எம்.சின்னையா அவர்கள் சென்னை கிண்டியிலுள்ள தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய தலைமை அலுவலகத்தில், மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் சுற்றுச்சூழல் துறையின் செயல்பாடுகள் பற்றி உயர் அதிகாரிகளுடன் 25.05.2011 அன்று ஆலோசனை நடத்தினார்கள். இக்கூட்டத்தில் வாரிய தலைவர் திரு.விஷ்வநாத் ஷெகாவ்கர், இ.ஆ.ப., சுற்றுச்சூழல் துறை இயக்குநர் திரு.ஸ்ரீநிவாசமூர்த்தி, இ.வ.ப., வாரிய உறுப்பினர் செயலர் திரு.இராமச்சந்திரன் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டார்கள். கூட்டத்திற்குப் பிறகு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாரிய வளாகத்திலுள்ள சுற்றுச்சூழல் ஆய்வகம், தொடர் காற்று கண்காணிப்பு மையம் மற்றும் இசைவாணை உதவி மையம் ஆகியவற்றையும் பார்வையிட்டார்கள்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**